**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துக்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அவை பயன்பாட்டிற்கு கிடைக்கும் போது தொடங்குகிறது. எனினும், பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்படாது. இதன் விளைவாக, ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 4,338,024 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது. | - | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 121,038,191 கிரயமான ஏனைய சொத்துக்கள் மற்றும் உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் (AHEAD) செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட ரூபா 197,318,037 கிரயமான சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் உள்ள ஒரே தன்மையான அல்லது செயற்பாட்டின் சொத்துக்களை வகைப்படுத்தாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன. | 2023 இன் நிதிக்கூற்றுக்களில் இருந்து ஏனைய சொத்துக்களை ஒரே மாதிரியான தன்மையின் கீழ் குழுவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பெறுமானத்தேய்வு விகிதம் வெளிப்படுத்தப்படும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,079,954,567 கிரயமான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 6,247,846 கிரயமான கற்பனை சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தி மற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 103 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் கற்பனை சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் அவை மேலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களிற்கு புதுப்பிக்கப்பட்ட பெறுமதிகளை இணைப்பதற்கு சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு செயன்முறை தொடங்கப்பட உள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 288,849,301 தொகையான மூலதன மானியம் மற்றும் நன்கொடைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிட்ட தொகையை வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 18 இன் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு நிதி நிலைமைக் கூற்றில் உயிரியல் சொத்துக்களாக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் தனித்தனியாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக, ரூபா 4,646,464 பெறுமதியான கால்நடைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் பிழையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | அது சரியான வகையின் கீழ் காட்டப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 முதல் 2022 வரையிலான ஆண்டுகளின் போது AHEAD செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருக்காததன் விளைவாக நிலையான சொத்துக்கள் மற்றும் பொது ஒதுக்கம் என்பன முறையே ரூபா 78,206,842 மற்றும் ரூபா 39,880,387 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 38,326,454 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஆண்டின் பற்றாக்குறை ரூபா 38,326,454 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் நாட்குறிப்பில் திருத்தம் செய்வதில் உள்ள சிக்கலை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இச் சிக்கலை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் 15 இடங்களில் அமைந்துள்ள 241.2 ஹெக்டெயர் பரப்பளவிலான காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | உரிமைத்துவத்தை மாற்றம் செய்தல் இறுதியாக்கப்பட்டதும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காணியின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 224,269,514 கிரயமான 3-அடுக்குமாடிக் கட்டிடம் அதன் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து 2020 ஆகஸ்ட் மாதத்தில் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அத் திகதி முதல் 2022 ஆம் ஆண்டு வரை பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கட்டிட பெறுமதி மற்றும் பொது ஒதுக்கம் என்பன முறையே ரூபா 14,951,301 மற்றும் ரூபா 26,164,777 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 11,213,476 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,213,476 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | ஒப்படைப்பு ஆவணங்கள் 2020 ஆம் ஆண்டைக் குறிப்பிட்டிருந்த போதிலும் மூலதனமாக்கல் பற்றிய கவலைகள் எழுந்து 2022 இல் தீர்க்கப்பட்டன. | பயன்பாட்டிற்கு சொத்து கிடைத்தவுடன் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டும். |
| (ஈ) | திருகோணமலை வளாகத்திற்குரிய AHEAD செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 22,025,643 பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டில் இருமுறை மூலதனமாக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய மானியங்கள் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | அது 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நாட்குறிப்பு உறுதிச்சீட்டால் சீர்செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களின் மூலதனமாக்கல் பிரதி செய்யப்படுவதை தவிர்ப்பதற்கான கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,885,562 தொகையான உபசரணை படிக்கான கொடுப்பனவு வருமானமாக கருதப்படுவதற்கு பதிலாக உபசரணை படி செலவின கணக்கில் பிழையாக செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவினம் ரூபா 3,885,562 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | சுயமாக உருவாக்கப்பட்ட நிதியில் இருந்து உபசரணைப் படி செலுத்தப்பட்டுள்ளது. | வருமானம் மற்றும் செலவினங்களைக் குறைத்துக் காட்டுவதை தவிர்ப்பதற்கான சரியான கணக்கீட்டு செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ரூபா 1,112,648,116 கூட்டுமொத்தமான கட்டுப்படுத்தப்பட்ட நிதி, பரிசுகள், நன்கொடைகள் மற்றும் ஏனைய மானியங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் பகுதியாகக் காட்டப்படாமல் நடைமுறையல்லா பொறுப்புக்களாக பிழையாக சேர்க்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்று சமர்ப்பிப்பிற்கான பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையை பின்பற்றி நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதி நிலைமைக் கூற்றில் உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்களை சரியாக வகைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | AHEAD செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 65,105,980 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஏப்ரல் 30 வரை சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தது துடன் மீதமுள்ள சொத்துக்கள் மூலதனமாக்கப்படும். | கணக்குகளிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | வங்கிக் கணக்கொன்றில் உள்ள ரூபா 3,925,059 கூட்டுமொத்தமான நேரடி வரவு மற்றும் 2 வங்கிக் கணக்குகளில் உள்ள ரூபா 1,604,146 கூட்டுமொத்தமான வைப்புக்கள் 12 ஆண்டுகளுக்கும் மேலாக செலவினங்கள் மற்றும் வருமானமாக இனங்காணப்படாமல் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் முறையே இனங்காணப்படாத வரவுகளாகவும், தேறாத வைப்புக்களாகவும் காட்டப்பட்டுள்ளன. | பேரவை 2009 இற்கு முந்தைய ஆவணங்களைக் கண்டுபிடிப்பதில் சவால்களை எதிர்கொண்டது, இது பதிவழிப்புக்களிற்கு வழிவகுத்தது. இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பரிந்துரைகளின் விளைவாக மூன்று வங்கிக் கணக்குகளின் பதிவழிப்புக்கள் செய்யப்பட்டன. | அந்த மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பணிக்கொடை | 513,790,136 | 534,911,501 | 21,121,365 | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றில் நாட்குறிப்பு உறுதிச்சீட்டு மூலம் சீர்செய்யப்பட்டது. | பணிக்கொடை ஏற்பாடு பட்டியலுடன் பொருந்துமாறு இணக்கம் செய்யப்பட்டு சீர்செய்யப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 455,463,867 மொத்த பெறவேண்டிய மீதிகளில் ரூபா 238,964,922 அல்லது 52 சதவீதத்திற்கு சமமான தொகை 03 முதல் 40 ஆண்டுகள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.<br><br>அதில், 10 முதல் 40 ஆண்டுகள் வரை பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய 70 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 150,320,855 பெறுமதியான பிணைமுறியை அறவிட முடியவில்லை. | பேரவை 2005 இற்கு முன்னர் ஆவணங்களை கண்டுபிடிக்க இயலாதமையை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2009 இற்கு முன்னர் அறியப்படாத குறைபாடுகளை பதிவழிப்புக்கள் மூலம் நிவர்த்தி செய்கிறது. பிரமாணங்கள் மற்றும் COPE வழிகாட்டலுக்கு இணங்க பல்கலைக்கழகம் சிக்கலை சீர்செய்வதற்கு தீவிரமாக செயற்பட்டு வருகிறது. 2010 இற்கு முந்தைய பழைய முற்பணங்களுக்கு தேவையான ஆவணங்கள் மீட்டெடுக்கப்பட்டவுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>பிணைமுறி அறவீடு மற்றும் மீளாய்வுக் குழுவானது பிணைமுறியை திருப்பிச் செலுத்தாதவர்களிடம் இருந்து, அவர்களின் கிடைக்கக்கூடிய UPF மீதிளில் இருந்து பிணைமுறி பெறுமதிகளை அறவிடுவதற்கு இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தியது. | பெறவேண்டியவைகள் மற்றும் பிணைமுறி பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 3,973,526 கூட்டுமொத்தமான வாழ்க்கைச் செலவு படி நிலுவைகள், அதிகமாக அறவிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 முதல் 18 ஆண்டுகள் வரையான காலவீச்சில் பல்கலைக்கழகத்தால் அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் செலுத்த வேண்டியிருந்தது. | தற்போது நிலுவையாக உள்ள அனைத்து செலுத்த வேண்டியவைகளையும் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி. 571<br>------------------------------- | 03 முதல் 07 வருடங்கள் வரையான காலவீச்சில் கணக்குகளில் எஞ்சியிருந்த ரூபா 15,940,456 தொகையான நிறுத்திவைத்தல் பணம் மற்றும் ரூபா 6,916,081 தொகையான மீளளிக்கக்கூடிய வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாட்டு பொறுப்புக் காலப்பகுதியின் பின்னர் பிடித்துவைத்தல் பணம் செலுத்தப்படும். | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை<br>------------------------------ | | | |
| | (i) IV ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | ஆரம்பத்தில் திருகோணமலை வளாகத்தில் கணனி விஞ்ஞானத் துறையில் பிரிவில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I, பிரமாணங்களுக்கு முரணாக கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் பல்துறைக் கற்கைகள் துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அதேநேரம், விரிவுரையாளர் 2020 நவம்பர் 19 முதல் 2022 செப்தெம்பர் 01 வரை தொழில்நுட்ப பீடத்தில் 45 விரிவுரை மணித்தியாலங்களை அல்லது எதிர்பார்க்கப்படும் பணி விதிமுறைகளில் 7 சதவீதத்தை மாத்திரமே நடாத்தினார். | குறைதீர்ப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்காக பேரவை அவரை இடமாற்றம் செய்திருந்தது. | தாபன விதிக் கோவையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) III ஆம் அத்தியாயத்தின் 20.8 ஆம் உபபிரிவு மற்றும் VI ஆம் அத்தியாயத்தின் | 2018 பெப்ரவரி 24 இல் சிரேஷ்ட உதவி நூலகர் மற்றும் 2020 ஆகஸ்ட் 29 இல் தாவரவியல் துறைக்கு இணைக்கப்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர் ஆகியோரின் பதவி விலகலை பேரவை | பேரவை உபவேந்தருக்கு மீளப் பணிக்கமர்த்துவது குறித்து முடிவு செய்வதற்கு | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4.1 ஆம் உபபிரிவு | ஏற்றுக்கொண்டது. பின்னர் சிரேஷ்ட உதவி நூலகர் மற்றும் விரிவுரையாளர் ஆகியோர் முந்தைய பதவிகளுக்கு முறையே 2018 மே 17 மற்றும் 2020 செப்தெம்பர் 02 முதல் அமுலுக்கு வரும் வகையில் மீளப் பணிக்கமர்த்தப்பட்டனர். எனினும், பிரமாணங்களுக்கு முரணாக சம்பள படிநிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இரு உத்தியோகத்தர்களும் மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டதில் இருந்து 2022 திசெம்பர் 31 வரை ரூபா 4,965,152 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | அதிகாரம் அளித்ததுடன் தொடர்புடைய பிரிவுகளின் அடிப்படையில் தாவரவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I ஆக அவர் பதவி விலகுவதற்கு முன்னர் அதே சம்பளப் படிநிலை முடிவு செய்யப்பட்டது. | |
| (iii) | III ஆம் அத்தியாயத்தின் 26.7.2 ஆம் உபபிரிவு | வருகைதரும் விரிவுரையாளர்கள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படாமல் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். | எதிர்காலத்தில் நடைமுறையை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iv) | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உபபிரிவு மற்றும் UGC இன் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம் | கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டில் ரூபா 978,942,951 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | கல்விசார் பதவியணியினர் தங்கள் வருகையை பாரம்பரியமாக விரல் அடையாள இயந்திரங்களில் பதிவு செய்வதில்லை. | தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (v) | UGC இன் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதம் மூலம் திருத்தப்பட்டவாறு XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு. | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அதன் அறிக்கையானது 2023 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை 2023 யூலை 07 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை மற்றும் அது தொடர்பான | BOS அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு பதவியணியினர் பணிக்கப்பட்டனர். 2019 ஆம் ஆண்டிற்கான பயன்படுத்தப்பட முடியாத பொருட்களை அகற்றுவதற்கான ஏலம் 2023 ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2020 மற்றும் 2021 ஏலங்களுக்கு | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயன்படுத்தப்படாத பொருட்களை அகற்றுதல் தொடர்பான நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தயாராகி வருகிறது. | |
| | | மேலும், 2020 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் 18 பிரிவுகளில் இருந்து 579 பொருட்கள் தொலைந்து போயுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எனினும், நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கூறலை தீர்மானிப்பதற்கு விசாரணை நடைபெற்று வருகிறதுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br>--------------------- | | | |
| (i) | 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய கடிதம் | மாதாந்தம் மீள்நிரப்புச் செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 2,305,000 தொகையான மஹாபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கூறு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மீள்நிரப்புச் செய்யப்படாமல் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | மானிய நிதியை மீள்நிரப்பு செய்வது தொடர்பாக UGC உடன் வழக்கமான தொடர்பாடல் மற்றும் பின்தொடர்தல் பேணப்பட்டது. | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை | 2022 இல் கலைகள் மற்றும் கலாச்சார பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் 215 பாடங்களில் 31 பாடங்களுக்கான பெறுபேறுகள் 01 முதல் 05 மாதங்கள் வரை தாமதமாகியது. அதேபோன்று, 2022 இல் விஞ்ஞான பீடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் 42 பாடங்களில் 24 பாடங்களுக்கான பெறுபேறுகள் 1 முதல் 7 மாதங்கள் வரை தாமதமாகியது. | 15/2015 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சை பெறுபேறுகளை உரிய காலத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2022 சனவரி 03 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 130,298,076 கிரயமான நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்களின் கிரய மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நூலகம் அதன் அனைத்து புத்தகங்களின் டிஜிட்டல் பொருளிருப்புக்களை பூர்த்தி செய்திருந்ததுடன் பொருள் மெய்மையாய்வு தற்போது நடைபெற்று வருகிறது. | -மேற்படி- |
| (iv) | 2022 பெப்ரவரி 23 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைக் கடிதம் | 2022 ஆம் ஆண்டின் போது அரச பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுக்கான மாதாந்த எரிபொருள் வரம்பு 145 லீற்றரிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், 2022 சனவரி முதல் செப்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட வரம்புக்கு முரணாக ரூபா 1,012,079 பெறுமதியான 2,983 லீற்றர் எரிபொருள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. | பேரவையின் பரிந்துரையுடன் UGC இன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) 2015 ஒக்தோபர் 03 இல் நடைபெற்ற 257 ஆவது கூட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியின் 2015 ஒக்தோபர் 12 ஆம் திகதிய ஈயூஎஸ்எல்/ஈஎஸ்ரீ/06/2015 ஆம் இலக்க கடிதம் | | 2023 பெப்ரவரி 27 வரையிலும் கைரேகையை முறைமையில் ஸ்கேன் செய்வது தொடர்பான அறிவுறுத்தல்களை மருத்துவ அதிகாரி பின்பற்றியிருக்காததுடன் 2015 ஒக்தோபர் முதல் 2023 பெப்ரவரி வரை ரூபா 9,277,829 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டுள்ளது. | தினசரி வருகைக்கான பதிவுப் புத்தகம் பேணப்பட்டு வருகிறதுடன் அது பதிவாளரால் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகிறது. | தாபன விதிக்கோவை மற்றும் பேரவையின் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 503,716,980 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 244,038,580 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 259,678,400 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள், ஒப்பந்தச் சேவைகள், ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் வழங்கல்கள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் என்பன முறையே ரூபா 90,222,753, ரூபா 70,678,489, ரூபா 56,721,660 மற்றும் ரூபா 53,213,132 ஆல் அதிகரித்தமையே மேற்படி வீழ்சிக்கு பிரதானமாக பங்களித்த காரணங்களாகும்.

**2.2 பிரதான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிற்கான தனிப்பட்ட வேதனாதிகள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 144,475,594 அல்லது 9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 முதல் 2015 வரையிலான காலப்பகுதியின் போது தனியார் நிறுவனத்திற்கு நிலையான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரிப்பதற்காக ரூபா 6,247,846 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் சில கொடுக்கல்வாங்கல்கள் 2022 திசெம்பர் 31 வரையிலும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, பதிவேட்டைத் தயாரிப்பதற்கான செலவினம் பயனற்றதாகியிருந்தது. | முறைமையில் நிலையான சொத்தை நாளதுவரையாக்குவது தொண்ணூறு சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள விடயங்களை நாளதுவரையாக்கி சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இங்கிலாந்தில் Ph.D இற்காக ரூபா 14,258,446 பிணைமுறியில் கைச்சாத்திட்ட ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவில் உள்ள விரிவுரையாளர் ஒருவரிற்கு கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. எனினும், கல்வி விடுமுறையில் ஏற்பட்ட கணிப்பீட்டு பிழை காரணமாக இலங்கைக்கு திரும்புமாறு பல்கலைக்கழகம் கோரியிருந்தமையினால், பல்கலைக்கழகத்திற்கு ரூபா 3,601,837 மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது, பொறுப்பான உத்தியோகத்தரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தில் 45 மாதகால கற்கை விடுமுறை வழங்கப்பட்டது, பின்னர் மேற்பார்வையால் 39 மாதங்களாக குறைக்கப்பட்டது. பின்னர், அவர் 45 மாதங்களுக்கு மேன்முறையீடு செய்தார், அது இறுதியில் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டது. | பொறுப்பான உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 ஆம் ஆண்டு முதல் அரசாங்க வங்கிகளின் இரண்டு கிளைகள் மற்றும் இரண்டு தானியங்கி இயந்திரங்களிற்கான (ATMs) இடவசதிகளை முறையான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தாமல் பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது. மேலும், இந்த நிறுவனங்களிடம் இருந்து நாளதுவரை எந்த வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாடகைத் தொகையை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்று, வங்கிகளுடன் முறையான உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையை கைச்சாத்திட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சிரேஷ்ட உதவி நூலகர் ஒருவர் 2018 மார்ச் 02 இல் பதவி விலகி இலங்கை மத்திய வங்கியில் சேர்ந்தார். பேரவை பதவிவிலகலை ஏற்றுக்கொண்ட போதிலும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அறிவிக்க முடியவில்லை. 2018 மே 17 இல் பணியை மீண்டும் தொடங்கிய பின்னர், பேரவை இடைப்பட்ட காலத்தை ஊதியம் இல்லாத சபடிகல் விடுமுறையாகக் கருதி அதை தொடர்ச்சியான சேவையாகக் கணித்தது. எனினும், அவர் அனுமதியின்றி 2018 மார்ச் 02 முதல் மே 16 வரை CBSL இல் பிரதம நூலகராகப் பொறுப்பேற்றதன் மூலம் நியமனக் கடிதத்தின் 14 ஆம் உட்பிரிவை மீறியிருந்தார். மேலும், அத்தியாயம் III 20.8 மற்றும் அத்தியாயம் VI 4.1 ஐ மீறும் வகையில், ரூபா 62,695 இற்கு பதிலாக ரூபா 67,807 சம்பளப் படியாக நிர்ணயிக்கப்பட்டது, இது 2022 திசெம்பர் 31 வரை ரூபா 2,553,876 மேலதிகக் கொடுப்பனவிற்கு வழிவகுத்தது. | பேரவை அவரது மீளப்பெறுவதற்கான கோரிக்கையை மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முன் சேவை அல்லது அலுவலகத்தை கருத்தில் கொள்ளாமல் அங்கீகரித்தது, இந்த காலப்பகுதி "சம்பளமற்ற சபடிகல் விடுமுறை" ஆக மாற்றப்பட்டது, இது 2018 மே 17 இல் அதே சம்பளப் படியில் மீள வேலைக்கமர்த்துவதற்கு வழிவகுத்தது. | நியமனக் கடிதத்தை மீறியதற்காகவோ அல்லது மீள்நியமன நடைமுறையின் பிரகாரமோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் பீடம் 2022 செப்தெம்பரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கு இடம் பெயர்ந்தது. எனினும், 2013 இல் ரூபா 67,853,580 கிரயத்தில் மூலதனமாக்கப்பட்ட முன்பு ஆக்கிரமிக்கப்பட்ட கட்டிடங்கள் காலியாகவும், வாடகைக்கு விடப்படாமலும் உள்ளதால் மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்பு இழக்கப்படுகிறது. | முன்னேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. | மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கு கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் தற்போதைய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொழில் சந்தை மற்றும் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும், மேலும் பாடத்திட்டத்தில் தொழில்நுட்ப பாடங்கள் மற்றும் மொழித் திறன்கள் எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், பிரயோக விஞ்ஞான பீடங்களில் உள்ள பாடத்திட்டம் அது தொடங்கியதிலிருந்து திருத்தப்பட்டிருக்கவில்லை. | கணனி விஞ்ஞான பாடத்திட்டத்தில் BSc திருத்தப்பட்டு, அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறோம். | மேலதிக காலதாமதமின்றி எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு பாடத்திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாணவர்களின் எதிர்காலத்தின் பிரகாரம் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ இளங்கலை (BSMS) பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் 05 கல்வி ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், 2014/2015 கல்வியாண்டில் BSMS நிகழ்ச்சித்திட்டம் 2016 ஆம் ஆண்டில் 46 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு 07 ஆண்டுகள் செலவிடப்பட்டன. பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதில் ஏற்படும் காலதாமதம் மாணவர்களின் தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளை எதிர்மறையாக பாதிக்கலாம். மேலும், 2014 மற்றும் 2015 இல் நடைபெற்ற முறையே 2012/2013 மற்றும் 2013/2014 கல்வி ஆண்டுகளிற்காக பதிவு செய்த மாணவர்கள், கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு 7 ஆண்டு காலஎல்லையை தாண்டியிருந்தனர். | வளாகம் மோதல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கொவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற வெளிப்புற காரணிகளால் பல பூட்டுதல்களை சந்தித்தது. பதவியணியினர் பற்றாக்குறையும் தாமதங்களிற்கு காரணமாகும். இடைநிற்றல் மற்றும் இறுதி பரீட்சைகளுக்கு தகுதியின்மை காரணமாக 40 மாணவர்கள் மாத்திரமே 2013/2014 தொகுதியில் பூர்த்தி செய்துள்ளனர். | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இறுதி காலநீடிப்பின் பிரகாரம் 2020 மே மாதத்தில் ஆராய்ச்சியை பூர்த்தி செய்வதற்கு ஒரு பேராசிரியருக்கு ஆராய்ச்சி மானியமாக ரூபா 7,500,000 தொகை 2015 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஒதுக்கீட்டில், ரூபா 4,500,000 செலவிடப்பட்டது, ஆனால் 2023 மே 04 வரையிலும் ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சியாளர் இறுதி ஆராய்ச்சியை சமர்ப்பித்து, மதிப்பாய்வாளர்களின் கருத்துக்களைச் சேர்ப்பதற்காகக் காத்திருக்கிறார். | மேலதிக காலதாமதமின்றி ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட நிதிகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 3,495,497 தொகையான மொத்த நிதிகள் 2 முதல் 5 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் அவற்றின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீதமுள்ள பகுதி, நிர்ணயிக்கப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக நியாயமான முறையில் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிதியைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குவைத் நிதியத்தின் கீழ் ரூபா 263,374,811 தொகை சுகாதார பராமரிப்பு சேவைகள் பீடத்திற்கான தளபாடங்கள், மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் இணைய சேவைகள் வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும், வளிப்பதனாக்கிகள், ஆய்வுகூட தளபாடங்கள் மற்றும் அலுமாரி உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததாலும் நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் ரூபா 147,574,057 தொகையான 70 வகையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் சபை அறை முறைமைகள் 1 முதல் 2 ஆண்டுகள் வரையான காலவீச்சில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கொள்கை முடிவு காரணமாக குவைத் நிதியம் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டிருந்ததால் உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் பெறுகைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. குவைத் நிதி விடுவிக்கப்பட்டதும், தேவையான வசதிகள் வழங்கப்படும். | முறையான உபகரணப் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் மாணவர்களின் நடைமுறை அமர்வுகளை மேம்படுத்துவதற்கும் தேவையான மருத்துவ ஆய்வுகூட வசதிகளுக்கு நிதியுதவி அல்லது மாற்று வளமூலங்களை ஆராய்வதற்கு முன்னுரிமை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. |
| (இ) | 2020 முதல் 2022 வரையிலான ஆண்டுகளின் போது 5 பீடங்களுக்கு AHEAD செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ரூபா 41,121,595 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 5 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அவற்றின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்து மெய்மையாய்விற்கு முந்தைய கணக்காய்வு பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பரீட்சை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற கல்வி அலுவல்கள் பிரிவுக்கு சொந்தமான ஆயிரத்து இருநூற்றி ஒரு மடிக்கும் மேசைகள், பொருள் மெய்மையாய்வு சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு பரீட்சிப்பின் போது பிரிவில் இருந்து 124 மடிக்கும் மேசைகள் பயன்படுத்தப்படாமல் பழைய விவசாய பீட வளாகங்களில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது கண்டறியப்பட்டது. | இப்பிரச்சனையை சீர்செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | இப்பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வின் போது இரண்டு கார்கள், வான் மற்றும் ஒரு லொறி உட்பட ரூபா 6,006,875 மொத்த கிரயமான 4 வாகனங்கள் 2021 யூன் முதல் நாளதுவரை அவற்றின் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காதமை கண்டறியப்பட்டது. எனினும் இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிக்கடி பழுதடையும் மற்றும் அதிக எரிபொருள் நுகர்வு கொண்ட காலமான வாகனங்களுக்கு விலையுயர்ந்த பராமரிப்பு தேவைப்படுகிறது. அத்தியாவசிய சூழ்நிலைகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்ட பயன்பாடு காணப்படுகிறது. நம்பகமான போக்குவரத்து | வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் பராமரிப்புச் செலவினங்களைக் குறைப்பதற்கும் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விருப்பங்களுக்கு இடமளிக்கும் வகையில், திறமையான அகற்றலுக்காக அவற்றை ஏலமிடுவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. | |

**3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான சாத்தியவள ஆய்வு மற்றும் போதிய நிதியுதவியின்றி, திருகோணமலை வளாகத்தில் உள்ளக வீதி நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 மே 02 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டது. ரூபா 145,000,000 மொத்தக் கிரய மதிப்பீட்டில் கட்டம்-I இற்கான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 55,775,000 ஆகும். உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தம் 2017 நவம்பர் 01 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2017 நவம்பரில் கட்டம்-I இற்கான ஒப்பந்தம் 45 சதவீத பௌதீக முன்னேற்றத்துடன் கைவிடப்பட்டது. பின்னர், ஒப்பந்தம் 2019 திசெம்பர் 03 இல் மீண்டும் தொடங்கப்பட்டது, ஆனால் 2023 மே 23 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 36 சதவீதம் மாத்திரமேயாகும். | நிதி ஒதுக்கீடு எடுகோள்களில் இருந்து கொடுப்பனவு தாமதங்கள் நிறுத்தப்பட்டன. கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் RDA உடன்படிக்கை 2019 இல் தீர்க்கப்படுவதை நோக்கமாகக் கொண்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19, பொருளாதார நெருக்கடி என்பன முன்னேற்றத்திற்கு பாதகமானவையாகும். சவால்கள் இருந்த போதிலும் 2022 இன் பிற்பகுதியளவில் கட்டம் I 95% பூர்த்திசெய்யப்பட்டது. | மேலதிக காலதாமதம் இன்றி நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திருகோணமலை வளாகத்தில் பல்நோக்கு கேட்போர் கூடத்துக்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 674,470,220 ஒப்பந்த பெறுமதிபுடன் 2018 ஆகஸ்ட் 09 இல் வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2021 பெப்ரவரி 08 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2023 மே 23 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 09 சதவீதம் மாத்திரமேயாகும். | நிதிப் பற்றாக்குறையால் நிர்மாண செயற்திட்டம் தாமதமாகியது. ரூபா 155 மில்லியன் முற்பணத்தில் ரூபா 25 மில்லியன் மாத்திரமே வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரரின் மெதுவான முன்னேற்றம் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான பரிந்துரைக்கு வழிவகுத்தது. ஒப்பந்ததாரர் தொடர விருப்பம் தெரிவித்தார், ஆனால் கொவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக செயற்திட்டம் மேலதிக தாமதத்தை எதிர்கொண்டது. இது 2021 நடுப்பகுதி வரை முன்னேற்றத்தை பாதித்தது. | -மேற்படி- |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்தப்பட்ட பதவியணியினர் 2012 இன் பிரகாரம் 2013 சனவரி 31 இல் தாதிய உத்தியோகத்தர் தரம் II இற்கான பதவியணியினர் UGC ஆல் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் நிரந்தர தாதிய உத்தியோகத்தர் நாளதுவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் ஒப்பந்த அடிப்படையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். | 2016 சனவரி மற்றும் 2021 பெப்ரவரியில் பல ஆட்சேர்ப்பு அழைப்புக்கள் பதவியணியினர் வெற்றிடங்களுக்கு தகுதியான விண்ணப்பதாரர்களை வழங்கவில்லை. மருத்துவ நிலைய கோரிக்கை காரணமாக ஒப்பந்த தாதிய உத்தியோகத்தரின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் பேராசிரியர், விரிவுரையாளர், தற்காலிக செயன்முறை பயிற்றுவிப்பாளர் (Demonstrator), தற்காலிக தாதிய உத்தியோகத்தர் மற்றும் தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் போன்ற ஐம்பத்தைந்து பதவிகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் வெற்றிடமாக இருந்தன. | பல விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பேராசிரியர் வெற்றிடங்கள் குறைந்த ஆர்வத்தைக் காட்டியதுடன் சில துறைகளிற்கு விண்ணப்பதாரர்கள் காணப்படவில்லை. சுகாதார அமைச்சு தக்கவைத்துள்ளதால் 5 ஆண்டுகளில் சில நியமனங்கள் காணப்பட்டன. | -மேற்படி- |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 6 பீடங்கள் மற்றும் பிரிவுகள், நிலையங்கள், அலகுகள் மற்றும் பிரிவுகள் (Cells) உட்பட 10 ஏனைய பிரிவுகளில் 1,262 மொத்த நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், இந்த திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளில், 638 நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை, இது மொத்த திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளில் 51 சதவீதமாகும். | 2022 முன்னேற்ற அறிக்கைகள் பெறப்பட்டன, பொருளாதார நெருக்கடி தொடர்பான நிதி பற்றாக்குறை மற்றும் மாணவர்கள் காணப்படாமை என்பன செயற்பாட்டு தாமதங்களுக்கு முக்கிய காரணங்களாக உள்ளன. | இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |